DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No.392/2025 |
| Deposition of witness | : | PW- 3 |
| Name | : | பன்னீர்செல்வம் |
| Father's /Husband Name | : | நாகராஜன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 56 |
| Occupation | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24th day of March 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நன்னிலம் காவல்நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு என்னுடன் பணிபுரிந்த கலியுகவர்ணன் சிறப்பு உதவி ஆய்வாளரையும், சிவனேசன் உதவி ஆய்வாளரையும் எனக்கு நன்கு தெரியும். அவர்களுடைய கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு பரிச்சயம் என்பதாலும், இவ்வழக்கில் சாட்சிகள் எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்காத காரணத்தாலும், காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு நீதியின் நலன் கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக சாட்சியமளிக்கிறேன். கடந்த 04.06.2025-ம் தேதி நன்னிலம் காவல்நிலைய பொறுப்பு அதிகாரியாக சிறப்பு உதவி ஆய்வாளர் கலியுகவர்ணன் பணியிலிருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த மணி என்பவரிடம் புகார் வாக்குமூலத்தினை பெற்றுள்ளார். அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் 04.06.2025 -ம் தேதி 18.00 மணிக்கு நன்னிலம் காவல்நிலைய குற்ற எண். 124/2025, சட்டப்பிரிவுகள் 281, 125(a) BNS -ன் கீழ் வழக்கினை பதிவு செய்தார். அந்த முதல் தகவலறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்காக உதவி

ஆய்வாளர் சிவநேசன் வசம் ஒப்படைத்தார். அவர், இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு அன்றைய தினமே சென்று சாட்சிகள் சம்பத், பாலாஜி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.4** மற்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். பின்னர் எதிரி தானாக அன்றைய தினம் 17.30 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து தக்க காவல் நிலைய பிணையில் விடுவித்தார். பின்னர் இந்த விபத்தில் தொடர்பான வாகனமான PY 01 BP 6419 என்ற பதிவு எண் கொண்ட LMB என்ற காரினை, திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மண்டல போக்குவரத்து அலுவலர் காளியப்பன் என்பவரிடம் 17.06.2025–ம் தேதியன்று ஆய்வுக்காக ஒப்படைத்தார். பின்னர் அ.சா.1–க்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் சுதர்சன், முகுந்தன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களிடம் இருந்து விபத்து பதிவேடுகள் மற்றும் காயக்கருத்துரை ஆகியவற்றினை பெற்றார். அந்த விபத்து பதிவேடுகள் **அ.த.சா.ஆ. 6, 7** மற்றும் காயக்கருத்துரை **அ.த.சா.ஆ. 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.1 –க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் கொடுத்த சான்றின் அடிப்படையில் ஏற்கனவே இருந்த சட்டப்பிரிவான 281. 125(a) BNS லிருந்து 281, 125(b) BNS ஆக பிரிவு மாற்றம் செய்தார். அந்த சட்டப்பிரிவு மாற்ற அறிக்கை **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் இருந்து மோட்டார் வாகன ஆய்வறிக்கையினை 29.09.2025–ம் தேதியன்று பெற்றார். மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் முதல் தகவலறிக்கையை பதிவு செய்த கலியுகவர்ணனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் தனது புலன் விசாரணை முடித்து இந்நீதிமன்றத்தில் எதிரி மீது 281. 125(b) BNS –ன் கீழ் 29.09.2025–ம் தேதி இறுதியறிக்கையினை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் சொன்ன நாள் நேரத்தில், புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், புலன் விசாரணை அதிகாரி சம்பவம் இடத்திற்கு செல்லவில்லை என்றும், எதிரிக்கு இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 392/2025 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | கணேசமூர்த்தி |
| Father's /Husband Name | : | முருகேசன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 27 |
| Occupation | : | பெயிண்டர் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24th day March 2026. Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தாத்தா ஆவார். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பு சாட்சி அரசிற்கு ஆதரவாக சாட்சிமளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் கீழ் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி அரசுத்தரப்பில் கோரியதால் வழக்கின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 31.05.2025ம் தேதி காலை 07.00 மணியளவில் அ.சா.1 ஆன எனது தாத்தா எனது வீட்டருகில் சென்றபோது ஆஜர் எதிரி PY 01 BP 6419 என்ற பதிவெண் கொண்ட காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து என் தாத்தாவின் மீது மோதி, காயங்களை ஏற்படுத்தினார் என்றும், அதை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலீசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.